
# மன்னா

## CSI தமிழ் திருச்சபை
## அலைன்




பொழிவு 13 மார்ச் 2020 ஆகாரம் 03










**Special Thanks to Mr. D. Rajavel – Picnic Coordinator,**
**Mr. Sunith Samuel, Mr. M.C Christopher, Mr. Melbin Paul & Volunteers.**

# March 2020

| | | |
|---|---|---|
| 6th Mar<br>11:00 AM - 1:00PM | மாதாந்திர உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 6th Mar<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 13th Mar<br>7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்க சிறப்பு ஆரதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 20th Mar<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 21st Mar<br>7:30PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் | ஆயர் இல்லம் |
| 27th Feb<br>7:30PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st Mar<br>11:30PM – 12:30AM | மாத இறுதி / புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.

050 586 8173 / 056 441 1225 / 050 482 1006


## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஆலைய வளாகம், அலைன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Fellowship / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Women's Fellowship / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Friday's / வெள்ளிகிழமை | 6:15 PM | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |




## உள்ளே வாசிக்க..

ஆயர் மடல்

செயலரிடமிருந்து

திருமறை தியானப்பகுதி

வேதாகம களஞ்சியம்

மிஷனரி சுயசரிதை

கட்டுரைகள்

Youth Special

பாடல் பிறந்த கதை

Children’s Corner

வேத வினாவிடை போட்டி

பிறந்த/திருமண நாள்

தெரிந்து கொள்வோம்

வேத வாசிப்பு



# ஆயர் மடல்...





அன்புக்குரியவர்களே,

ஆன்மீக வசந்தகால வாழ்த்துக்கள்! **Lent season Greetings**!

இந்த லெந்து காலத்தில் நாற்பது நாளை எவ்வாறு நம்முடைய ஆன்மீக வாழ்க்கையின் உருமாற்றத்திற்கு பயன்படுத்தப்போகிறோம்? ஒவ்வொரு லெந்து காலமும் ஒரு விசுவாசியின் வாழ்க்கையை பாதிப்பதாக, உருமாற்றுவதாக அமைய வேண்டுமானால் அந்த விசுவாசி லெந்து காலத்தை தனக்கு ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டிய முக்கியமான காலம் என்று எண்ணிப்பார்த்து! இந்த காலத்தை தனிப்பட்ட முறையிலும், திருச்சபையோடும் இசைந்தும், பயபக்தியோடு அனுசரிக்க வேண்டும்.


இயேசு நமக்காக வனாந்திரத்தில் தன்னை ஒடிக்கிக்கொண்டு, தியானத்திலும், உபவாசத்திலும், ஜெபத்திலும் உறுதியாய் தரித்திருந்தார். பிதாவாகிய தேவனை தன்மூலமாக இந்த உலகத்திற்கு வெளிப்படுத்த தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டார். தன் வழியாக பிதாவாகிய தேவனை தான் செய்கிற கிரியைகள் மூலமாக வெளிப்படுத்த, ஊழியங்கள்மூலமாக வெளிப்படுத்த இந்த நாற்பது நாளை தனித்திருக்கிற, விழித்திருக்கிற, ஜெபித்திருக்கிற நாட்களாக பயன்படுத்தினார். நாமும் நம்மை சகலவிதத்திலும் பெலப்படுத்த இந்த லெந்து காலத்தை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டிக்கொள்கிறேன். கர்த்தருக்குள் உங்களை பெலப்படுத்துகிற , ஸ்திரப்படுத்துகிற காலமாக இந்த லெந்து காலம் இருப்பதாக.

இயேசு அன்றும்,இன்றும் மனிதர்களிடம் எதிர்பார்ப்பது கனிகள் நிறைந்த, செழிப்பான, பிறருக்குப்பிரையோஜனமான ஒரு வாழ்க்கை. அத்திமரத்தை ஏன் சபித்தார்? ஒரு தாலந்து வாங்கியவன் அதை வியாபாரம்செய்து கனிகொடுக்காமல் இருந்த பொழுது என்ன சொன்னார்? உள்ளதும் போய்விடாதபடி மிகவும் ஜாக்கிரதையாக இருக்க, விழித்துக்கொள்ளும் காலமாக இந்த லெந்து காலத்தை பயன்படுத்தி ஒரு புதிய ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்றுக்கொள்வோமாக!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு உங்கள் ஆயர்,
Rev. M. Christopher Rajendran.

# திருமறை தியானப்பகுதி




**அன்புக்குரியவர்களே!**

**எசேக்கியேல் 36ம் அதிகாரத்தின் முதல் பகுதியில் 1-15 வசனங்களில் இஸ்ரவேல் தேசத்தின் பகைவர்கள் ஆ..ஆ... நித்திய மேடுகள் எங்கள் வசமாயிற்று என்று சொல்லுகிறார்கள்** (the ancient regions of Judea and Samaria, which are the Mountains of Israel, today known as West Bank. U.N called it today as occupied territory. It is the same area that all the nations of the world gather together to condemn and speak against ISRAEL about, how up to date is the word of God?). The overview of this section shows us that the curses of Israel's enemies has a twofold effect from God: it will bring a curse on the one cursing Israel and a Blessing for Israel. God has declared his judgements against all nations especially Babylonian, Medo – Persian, Gracian, Egyptian, Syrian, Romans, Turkey, and other powers have fought for possession of Israel. Their attitude toward the land of the people of God's choice has stirred the fire of His jealousy, so that He declared His judgements against all nations.

**எசேக்கியேல் 36:7 ல் புறஜாதிகள்** (all nations) **தங்களுடைய அவமானத்தை நிச்சயமாய்ச் சுமப்பார்கள்.** Vs.**8 இஸ்ரவேல் மலைகளே, நீங்கள் உங்கள் கொப்புகளை விட்டு, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு கனிகளைக் கொடுப்பீர்கள்... நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களை கண்ணோக்குவேன்; பட்டணங்கள் குடியேற்றப்படும், அவாந்திரமான ஸ்தலங்கள் கட்டப்படும்... உங்களை வர்த்திக்கப்பண்ணுவேன். உங்களுக்கு நற்சீர் உண்டாக்கச்செய்வேன்.** The majority of this passage was fulfilled in 1948 when nation of Israel was formed. What God has done in that land since the turn of the 20th century is truly remarkable. While once

a wasteland, today Israel is an exporter of fruit and flowers to the whole world! This is the fulfillment of verse 8.

**கர்த்தர் இவ்வாறு இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதின் நோக்கம்!**

The purpose of God is "Then you will know that I AM the Lord". **இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை முறையாக அறிகிற அறிவிலே வளரவேண்டும். இந்த சத்தியத்தை 34 -39 அதிகாரங்களில் நாம் பார்க்கமுடியும்.** The taunts and scorn of Israel will end. God has a wonderful plan that includes restoring the nation of Israel firstly to Himself and secondly towards the return of the True King of Israel Lord Jesus Christ. **ஆனால் அவர்களோ கர்த்தருடைய நாமத்தை தங்களுடைய நடவடிக்கை, செயல்கள் மூலமாக பரிசுத்த குறைச்சலாக்கினார்கள்.** They defiled the Holy name of the Holy God. **(VS 18,19). மேலும் தேவநோக்கத்தை அறியாமல் இயேசுவைப்பற்றி தவறான புரிதலோடு அவரையும்,அவரது ஊழியர்களையும், திருச்சபையையும் துன்புறுத்தினார்கள்.**

It is the condition of Israel in unbelief and rebellion against Lord Jesus Christ till today. In 70 AD Israel was judged because of their unbelief and rejection of Lord Jesus Christ. According to 1 Thessalonians 2:14-15 they persecuted the church. Today also their major cities Jerusalem and Tel Aviv and other major cities are still largely secular and worldly. But slowly Christian converts are increasing day by day. **இவ்வாறு அவர்கள் இருந்தாலும்** God's is so faithful in keeping His covenant promise and covenant relationship. His call and His gifts are irrevocable (Romans 11:28-29).

**நம்முடைய தனிப்பட்ட விசுவாச வாழ்க்கையிலே எத்தனை முறை பாவம் செய்து விசுவாசத்தை செயல்கள் மூலமாக (dishonor God's name) மறுதலித்திருக்கிறோம்? தேவன் மாறுவதில்லை! ஆதலால் தான் கர்த்தர் எசேக்கியேல் 36:33ம் வசனத்தில் சொல்கிறார், நான் உங்கள் அக்கிரமங்களை யெல்லாம் நீக்கி சுத்தமாக்கும் காலத்திலே! ஆசீர்வாதங்கள் உங்கள்மேல் கடந்துவரும். இஸ்ரவேலுக்கு சுத்தமாக்கும் காலத்தைப் பற்றிய ஆவிக்குறிய விழிப்புணர்வு இன்னமும் ஏற்படவில்லை! இதைப்பற்றி பேதுரு மூலமாக பரிசுத்த ஆவியானவர்** Acts **3:19-21ல் பேசியிருக்கிறார். சுத்தமாக்கும் காலத்திற்கும்** the times of restoration of all things**க்கும் தொடர்புண்டு.** God will restore Israel to their land. He will restore them Spiritually as they are cleansed and put in a right relationship with God once again. (Zechariah 14:8-11).

**பரிசுத்த பவுல் மூலமாக ஆவியானவர் (**Romans **11:12'ல்) மிகத்தெளிவாக சொல்லியிருக்கிறார் இஸ்ரவேலரின் மீறுதல் புறஜாதிகள் இயேசுவைப்பற்றிய நற்செய்தியை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுவதற்கு ஆசீர்வாதமாக இருந்ததென்றால்! அவர்களுடைய** Restoration of Israel by God Almighty **எவ்வளவு ஆசீர்வாதங்களை இந்த உலகத்திற்கு கொண்டு வரும்? இந்த சிந்தனையோடுகூட இந்த சுத்திகரிக்க அமைக்கப்படும் லெந்து காலத்தை நாம் சரியாக பயன்படுத்தி**

**மேலும் மேலும் சுத்தமாகி நித்திய ஆசீர்வாதங்களை, வாக்குத்தத்தங்களை ருசித்துப்பார்க்க உங்களை அழைக்கிறேன்!**

**கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிப்பாராக!**

**இப்படிக்கு**
**உங்கள் அன்பு ஆயர்,**
**Rev. M. Christopher Rajendran**

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20'ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

**Your name / Quiz type / Month-Year**

**Church Email:**


**csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகள்/உங்கள் பெயர் விடுபட்டிருந்தால்; அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பான விசுவாசிகளே…

2019ஆம் ஆண்டு பொதுக்குழுவில் எடுத்த தீர்மானத்தின்படி; திருத்தப்பட்ட நம்முடைய திருச்சபையின் Constitution'ஐ 28/02/2020 அன்று சிறப்பு பொதுக்கூட்டம் நடத்தி ஒப்புதல் பெற தேவன் கிருபைக்கூர்ந்தார். Constitution Version-2/2020 வரும் புதிய நிதிஆண்டு முதல் அமலாகும்.

இதற்காக உழைத்த, ஜெபித்த, அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். கர்த்தர் மிகுந்த பலனை தருவார்.



# செயலரிடமிருந்து...


கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே...

இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த லெந்து நாட்களில் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும் வண்ணம், ஆவிக்குரிய எல்லா ஒழுங்குகளையும் தவறாமல், உறுதியோடு கடைபிடிக்க கர்த்தர் அருள்பபுரிவாராக.

கடந்த மாதத்தில் திருச்சபையாய் இன்ப சுற்றுலா, மற்றும் தென் கேரளா திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்கு சென்றுவர தேவன் நமக்கு கிருபை கூர்ந்தார். ஒன்றிணைந்து செயல்பட்ட திருச்சபை மக்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகளும் நன்றியும் உரித்தாக்குகிறேன். வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். நேசித்து தாங்குகின்ற ஒவ்வொருவருக்காக ‘வும் நான் தேவனைத் துதிக்கிறேன். இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

நமதாவிக்குரிய வாழ்க்கையில் பல உருமாற்றங்களை கொண்டு வருகிற இந்த லெந்து காலத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, இந்த மாதத்தில் தேவனை நெருங்கி ஜீவிக்க, தவறான வாழ்க்கையை முறையை வெறுத்தொதிக்கிவிட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு தவ வாழ்க்கையை இந்த புதிய மாதத்தில் மேற்கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் உருமாற்றம் பெற முயற்சி செய்வோம்.

இப்படிக்கு<br>
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்<br>
சுரேஷ் ராஜன்



## யோவான் எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | தண்டுவலி | படகுத் துடுப்பைத் தள்ளு | 6:19 |
| 2 | துடுப்பு | படகு வலிக்கும் பட்டையான முனையுடைய நீண்ட மரக்கோல், அகப்பை (மரக்கரண்டி) | - |
| 3 | கனவீனம் | அவமதிப்பு | 8:49 |
| 4 | வைது | பழித்து | 9:28 |
| 5 | இராத்தல் | சுமார் முந்நூற்று இருபது கிராம் | 12:3 |
| 6 | புயம் | கரம்/ஆற்றல் | 12:38 |
| 7 | முகாந்தரம் | காரணம் | 15:25 |
| 8 | தளவரிசை | தளம் அமைத்தல், கற்பரப்பு | 19:13 |
| 9 | நியாயாசனம் | நீதி இருக்கை | 19:13 |
| 10 | கபாலம் | மண்டையோடு | 19:17 |
| 11 | ஸ்தலம் | இடம் | 19:17 |
| 12 | கரியபோளம் | சந்தனத் தூள் | 19:39 |


## ரோமாபுரியருக்கு எழுதின நிருபம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | அநுபோகம் | உடைமை, பழக்கம், இன்பநுகர்ச்சி | 1:26 |
| 2 | விரகதாபம் | காதலர்களுக்குப் பிரிவில் தோன்றும் வேதனை, பிரிவுத்துயர், வேட்கை கொண்டு காமத்தீயால் பற்றிக்கொள்வது | 1:27 |
| 3 | வன்மம் | ஆழ்ந்த பகையுணர்வு | 1:29 |
| 4 | துராகிருதம் | கெட்ட நடத்தை, ஒழுக்கக் கேடு | 1:30 |
| 5 | வஸ்து | பொருள் | 9:20 |
| 6 | சமுசயம் | ஐயம், தெளிவின்மை, தயக்கம், ஐயுறவு | 14:23 |
| 7 | தர்மசகாயம் | பொருளுதவி | 15:31 |

**Those who determine not to put self to death will never see the will of God fulfilled in their lives.**

-Sadhu Sunder Singh-

# ஆர்தர் மர்காஷிஸ் (1577-1656)





இடையன்குடியில் மிஷனரியாக இருந்த ராபர்ட் கால்டுவெல் பேராயர் அவர்கள் 1875ஆம் ஆண்டு விடுமுறைக்கு இங்கிலாந்து சென்றிருந்தபோது இந்தியாவின் தேவைகளை குறித்து அறைகூவல் விடுத்தார்; அப்போது தேவனுடைய அழைப்புக்கு கீழ்ப்படிந்து; இந்தியாவில் ஊழியம் செய்ய தன்னை ஒப்புக்கொடுத்தவர்தான் 22 வயது வாலிபனான **ஆர்தர் மர்காஷிஸ்.**

அவர் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த போது மருத்துவக் கல்லூரியில் படித்து முதுநிலை தேர்விற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். மர்காஷிஸ் அவர்கள் இங்கிலாந்தில் உள்ள லமிடண்ட் நகரில் 1852ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் பிறந்தார். இந்தியாவிற்கு ஊழியம் செய்ய வந்த மர்காஷிஸ் 1875ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1876ஆம் ஆண்டு நவம்பர் முடிய இடையன்குடியில் மிஷனரி கால்டுவெல்லோடு தங்கி ஊழியர் பயிற்சி பெற்று; தமிழ் மொழியை கற்றுக்கொண்டார். 1876ஆம் ஆண்டு நாசரேத் பகுதி ஊழியப்பொறுப்பை ஏற்றார். 1877இல் உதவிகுழு பட்டமும், 1880இல் முழு குருப்பட்டமும் பெற்றார். மர்காஷிஸ் குள்ள உருவமும் குறுகிய தாடியும் உள்ளவர். ஆஸ்துமா நோயால் அவதியுற்று வந்தவர்; ஆனால் தான் விரும்பி ஏற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஊக்கமும் ஆற்றலும் கொண்டவர். அவர் நாசரேத்தில் பணியாற்றி வந்தபோது பெருமழை, பஞ்சம் மற்றும் காலராவினால் மக்கள் மடிந்தார்கள்; ஆயிரக்கணக்கானவர்கள் இறந்ததால்; அநேக பிள்ளைகள் அனாதைகளாய் பரிதவிக்கப்பட்ட நிலையில் இருந்தனர். அந்த அனாதைப் பிள்ளைகளுக்குகென்று 1877இல் விடுதி ஒன்றை மர்காஷிஸ் ஆரம்பித்தார். அந்த இல்லம் “அனாதை சாலை” என்று அழைக்கப்பட்டது. பின்னர் அது தொழிற்

கல்விக்கூடமாக மாறியது. இதை ஆரம்பித்தபோது பல ஜாதி மாணவர்கள் இங்கு தங்கி கல்வி, கைத்தொழிலோடு இயேசுவின் அன்பையும் கற்றனர். அனாதை சாலையில் படித்த பெண்கள் திருமண வயதை அடைந்த போது; அவர்களுக்கு ஏற்ற துணையை தேடி திருமணம் செய்யும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். 1878ஆம் ஆண்டு நாசரேத் பெண்கள் போர்டிங் பள்ளியில் படித்த பெண்களுக்கு ஆசிரியை பயிற்சி பள்ளியை ஆரம்பித்தார். முன்பே ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தினார். 1892ஆம் ஆண்டு மர்காஷிஸ் புதிய நிலம் வாங்கி புதிய கட்டிடம் கட்டி பரிசுத்த லூக்கா திருநாளான அக்டோபர் மாதம் 18'ம் தேதி **பரிசுத்த லூக்கா மருத்துவமனை** என பிரதிஷ்டை செய்தார். இம்மருத்துவமனை வளர்ச்சியடைய அரும்பாடுபட்டார். ஸ்ரீவைகுண்டம், உடன்குடி, காயாமொழி, காயல்பட்டினம் ஆகிய ஊர்களில் இருந்து வரும் நோயாளிகள்; மருத்துவமனையில் பணியாற்றிய டாக்டர்கள், நர்சுகள் ஆகியோரின் சேவையினால் கிறிஸ்துவின் அன்பை கண்டுகொண்டார்கள்.

மரத்திலிருந்து விழுந்து படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு வந்த சிறுவனை; மர்காஷிஸ் அதனை குணப்படுத்த எடுத்துக்கொண்ட முழு முயற்சிகளையும் கண்ணுற்றவனாக தான் குணம் பெறாத நிலையிலும் பெற்றோர் சம்மதத்துடன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனாக மரித்தான். இதை பார்த்து அவனது பெற்றோர் தம் சொந்த பந்தங்களோடு கிறிஸ்தவர்கள் ஆனார்கள். பரிசுத்த லூக்கா மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் மக்கள்; காலனா கூட இல்லாத நிலையில் இருந்ததை உணர்ந்த மர்காஷிஸ் அய்யர்; ஓராண்டில் கட்டண விதியை ரத்து செய்துவிட்டார்.



1902ஆம் ஆண்டு மழைக்காலத்தில் நாசரேத் பகுதியில் காலரா வியாதியினால் அனேகர் மரித்தனர். போர்டிங் பள்ளியில் 7 பேர் மாண்டனர். மர்காஷிஸ் ஆலயத்திற்கு சென்று மன்றாடினார்; தினசரி திருவிருந்து ஆராதனை நடத்த தீர்மானம் செய்தார். அன்று முதல் இன்று வரை நாசரேத்தில் காலை 7 மணிக்கு திருவிருந்து ஆராதனை நடைபெறுகிறது. மக்கள் மத்தியில் மரண பயமும் மரித்தோரின் ஆவியை பற்றிய பயமும் இருந்தது. அதைப் போக்க சகல ஆத்துமாக்களின் திருநாள் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. கிறிஸ்தவர்கள் பவனியாக கல்லறை தோட்டத்திற்கு இத்திருநாட்களில் சென்றனர்; உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை பூரணமாக மக்கள் பெற்றனர். 1903ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நாசரேத் சிறுவர் மிஷன் அமைப்பையும், 1904ஆம் ஆண்டு

பெண்கள் சங்க பண்டிகையையும் ஆரம்பித்தார். சபைகளில் வேதபாட வகுப்புகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே நடத்தப்பட்டன. எஸ்.பி.ஜி திருநெல்வேலி கைம்பெண் சங்கத்தை நிறுவினார். 1906ஆம் ஆண்டில் இச்சங்கம் மூலம் 59 விதவைகள் உதவி பெற்றனர்; ஆயுள் காப்பீட்டு திட்டம் முறைகளை அறியாத அக்காலத்திலேயே 1887ஆம் ஆண்டு "எதிர்கால சகாய நிதி" என்ற நிதி அமைப்பை ஏப்ரல் மாதம் முதல் நாள் விக்டோரியா மகாராணியின் பொன்விழா ஆண்டு நினைவாக மர்காஷிஸ் ஐயர் தொடங்கி வைத்தார். உபதேசிமாருக்காக மர்காஷிஸ் ஐயர் ஒரு வேதாகமம் பள்ளியை ஆரம்பித்தார். முதலாவது அதில் 8 மாணவர்கள் கற்றனர். மர்காஷிஸ் ஐயர் ஆட்சியர் அவர்களின் வேத அறிவை பாராட்டி சென்னை பேராயர் இவரை கன்னோனாக்கினார். அரசும் இவரது பணியை பாராட்டியது "கை சரி ஹிந்து" என்ற விருதையும் பதக்கத்தை அளித்தது. இவரது மகத்துவமான கல்விப்பணியை பாராட்டி சென்னை பல்கலைக்கழகம் தங்கள் குழுவில் ஒருவராக அவரை தெரிந்து கொண்டது. நாசரேத் தபால் அலுவலகத்திற்கு தந்தி வசதியை பெற்றுக் கொடுத்தவர் ஐயரவர்கள்.

1876இல் ஊழியத்தை ஆரம்பித்த மர்காஷிஸ் ஐயர் 1878குள்ளாக 14 சபைகளை உருவாக்கினார். தமது பணிக்காலத்தில் சுமார் 25க்கும் மேற்பட்ட புதிய சபைகளை உருவாக்கினார். அனைத்து இனமக்களும் கிறிஸ்துவை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு உயர்ஜாதி என்று கருதப்படும் மக்கள் மத்தியிலும் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். இவ்வூழியத்தின் முதல் பலனாக ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்த ரங்கையா நாயுடு என்பவர் 1879இல் நாசரேத் ஆலயத்தில் ஞானஸ்நானம் பெற்றார். அவர் தம்முடைய உறவினர்களால் சொத்துக்களை இழந்து தேவனுடைய ஊழியத்தின் நிலைத்திருந்தார். இதைத்தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக திரளானோர் கிறிஸ்துவில் நிலைத்திருந்தனர். 1881ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் தேதி குருகாட்டூரில் 303 பேருக்கும்; நவம்பர் 12ம் தேதி தொண்ணூத்தி எட்டு பேருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது

கிறிஸ்தவர்களுக்கு வேலை அந்நாட்களில் மறுக்கப்பட்டது; பொய் வழக்குகள் போடப்பட்டு துன்பப்பட்ட நேரத்திலும், ஜனங்கள் உறுதியாய் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தனர். 1901ஆம் ஆண்டு நாசரேத்தில் மட்டும் 1482 விசுவாசிகள் இருந்தனர். மர்காஷிஸ் அய்யர் ஆஸ்துமா வியாதியினால் அடிக்கடி துன்பம் அடைந்தார். ஆனாலும் தம் பணியினை உண்மையுடன் செய்து வந்தார். 1885ஆம் ஆண்டு தம்முடைய ஊழியங்களோடு முதலூர் கிரிஸ்டியானகரம் வட்டாரங்களின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். 1889ஆம் ஆண்டு மே மாதத்தில் மர்காஷிஸ் அய்யர் வியாதியினால் மரித்து விடும் நிலைக்கு வந்தார். கடற்பயணம் குணத்தை கொடுக்கும் என ஜப்பானுக்கு கடலில் பயணமானார்; மூன்று மாதங்களில் குணமடைந்து மறுபடியும் நாசரேத் வந்தார். 1905ஆம் ஆண்டு மறுபடியும் பலவீனப்பட; கடற்பயணம் மேற்கொண்டு ஆறு மாதத்திற்குப்

பின் திரும்பி வந்தார். 1908 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் நாள் மர்காஷிஸ் அவர்களின் உடல் மிகவும் பலவீனமடைந்து ஆஸ்துமா வியாதி வாத நோயும் அவரை வேதனைக்கு உள்ளாக்கியது. 27/4/1908ஆம் ஆண்டு தேவனுடைய கரங்களில் தன்னுடைய ஆவியை ஒப்புவித்தார். அவருடைய சரீரம் நாசரேத்து எடுத்துச் செல்லப்பட்டு ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி 1908ஆம் வருடம் மாலை சாயர்புரம் ஐயரால் நாசரேத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மர்காஷிஸ் அய்யர் மரிக்கும்போது இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் உருவாக்கப்பட்டிருந்தன ஒரு கைத் தொழில் கல்வி நிலையமும் இருந்தது, அனாதைப் பிள்ளைகளுக்கு இரண்டு விடுதிகளும், ஒரு வேதாகம கல்லூரியில் பல கிராமங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பள்ளிகளும் நிறுவப்பட்டு இருந்தன.

இதைக் கேட்கிற சகோதரனே சகோதரியே... தேவனுடைய ஊழியத்தை செய்வதற்கு பலவீனமான சரீரம் சாக்குப்போக்கு அல்ல என்பதை நிரூபித்துள்ளார் மர்காஷிஸ். அவருடைய வாழ்க்கையை நமக்கு ஒரு பெரும் சவாலாக நம் முன்னே நிற்கிறது. அவரைப் பற்றி கேள்விப்படாதவர்கள் எப்படி அவரை விசுவாசிப்பார்கள் என்ற அழைப்பின் தொனி இன்றைக்கும் நம்மை நோக்கி கடந்து வருகிறது.

**உன் வசதி வாய்ப்புகளை விட்டு ஆண்டவர் காட்டும் இடத்திற்குச் செல்ல நீ ஆயத்தமா..? கிறிஸ்துவின் அன்பு உன்னை நெருக்கிய வில்லையோ..?**


**From my many years of experience, I can unhesitatingly say that; the cross bears those who bear the cross.**

**-Sadhu Sunder Singh-**

கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்க்கண்ட நிகழ்வுகள் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Sports Meet'2020**
சிறுவர் வேதாகம பள்ளி வகுப்புகள் (**CBS-Weekly**)
விடுமுறை வேதாகம பள்ளி (**VBS 2020**)

இது நடைபெறும் புதிய தேதி மற்றும் நேரம் பின்னர் சபை குழுவால் தீர்மானிக்கப்பட்டு உங்களுக்கு அறிவிக்கப்படும்.




நிழல் மனித வாழ்வுக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று. அது இந்த உலகில் நமக்கு பல்வேறு வழிகளில் கிடைக்கிறது. இங்கே வேதத்தில் குறிக்கப்பட்டுள்ள சில நிழல்களைப் பார்ப்போம்.

## 1. முட்செடியின் நிழல்:

நியாதிபதிகள் 9:8–15 வரையுள்ள வசனங்களை வாசிக்கும் போது, அருமையான உவமை ஒன்றைப் பார்க்கிறோம். அதில் விருட்சங்களெல்லாம் சேர்ந்து தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று முறையே ஒலிவமரம், அத்திமரம், திராடசைசெடி ஆகியவைகளிடம் சென்று ‘‘நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு என்று கேட்ட போது, அவைகள் மனிதர்களுக்கும், கடவுளுக்கும் மகிமையான தங்களிலுள்ள விஷயங்களை விட்டு விட்டு, உலக பூர்வமான மேன்மையை நாட மாட்டோம்’’ என்று மறுத்து விட்டன. கடைசியாக அவை முட்செடியிடம் சென்று ‘‘நீ எங்களுக்கு ராஜாவாயிரு’’ என்று கேட்டன. முதலில் முட்ச்செடி அவைகள் மீது சந்தேகம் கொண்டது. ‘‘இது உண்மையான காரியமானால் என் நிழலிலே வந்தடையுங்கள்’’ என்றது. இல்லா விட்டால் முட்டிச்செடியிலிருந்து அக்கினி புறப்பட்டு லீபனோனின் கேதுரு மரங்களை பட்சிக்கக்கடவது’’ என்றது. நாம் எப்பேர்பட்ட நிழலை தேடுகிறோம். இழைப்பாறுதலின் நிழலா? பட்சிக்கும் நிழலா?

## 2. ஆமணக்குச்செடியின் நிழல்:

(யோனா 4 : 6) ஆமணக்கு செடி பெரிய அடர்ந்த இலைகளை உடைய செடி. இதன் கீழ் தங்குபவர்கள் மனதுக்கு இதமான இளைப்பாறுதலுக் கேதுவான நிழலைப் பெறுவார்கள். யோனா, கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளை மறந்ததினால், அவர் அந்த ஆமணக்குச் செடியை அழித்து விடுகிறார், ஆகவே, யோனா இழைப்பாறுத 'லின் நிழலை இழந்து விடுகிறான் என்று பார்க்கிறோம். நம்முடைய வாழ்விலும் தேவன் நமக்குத்தந்தருளிய அனேக ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் வேளைகளில் அந்த ஆசீர்வாதங்களை நமக்கு ஈவாய் தந்தவரை மறந்து விட்டு இழைப்பாறுதலின் நிழலை இழந்து நிற்கின்றோமா! சிந்திப்போம்!! தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக காணப்படுகிறோமா? மறந்து வாழ்பவர்களாக காணப்படுகிறோமா?

## 3. கன்மலையின் நிழல்:

ஏசாயா32:2'ல் அவர் "பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்" என்று பார்க்கிறோம். யார் இந்த கன்மலை? ஏசாயா 26:4 & 1 கொரிந் 10:4 வசனங்களைப் பார்க்கும் போது கிறிஸ்துவே அந்த கன்மலை என்று வேதம் நமக்கு கற்பிக்கிறது. இந்த கன்மலையின் நிழல் எப்படிப்பட்டது? ஏசாயா 25:4 சொல்லுகிறது "நீர் ஏழைக்கு பெலனும், நெருக்கப்படுகிற எழியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்" என்று. 1 கொரிந் 10:4 சொல்லுகிறது "அந்த கன்மலை கிறிஸ்துவே" என்று. உலகில் காணப்படும் மலைகளிலும் நிழல் கிடைக்கிறது. அவை நிரந்தரமானதல்ல சூரிய ஒழிக்குத் தக்கதாக மாறிக்கொண்டே இருக்கும். இந்த கன்மலையின் நிழலோ நிலையானது சூழ்நிலைக்கேற்ப மாறாதது.

நாம் எப்படிப் பட்ட நிழலில் அடைக்கலம் புக எத்தனிக்கிறோம்...

**சூழ்நிலைக்கேற்ப மாறுகின்ற நிழலையா?**

**எந்த சூழ்நிலையாலும் மாறாத மாற்ற முடியாத நிழலையா?**

**சிந்திப்போம்..!**

**செயல்படுவோம்...!**

*M. Nesamony*




ஒரு பெரிய நகரத்தில் ஒரு நற்செய்தியாளர் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் தங்கியிருந்த இடத்திற்க்கு இரண்டு முரடர்கள் வந்தார்கள். அவரை குறுக்குக் கேட்டு திணற அடித்து, வெட்கப்படுத்த வேண்டும் என்பதற்க்காகவே அவர்கள் வந்தார்கள். வேதத்திலிருந்து பல வேண்டாத கேள்விகளை அவரிடம் கேட்டார்கள்.

ஊழியரும் பொறுமையாக எல்லாவற்றிற்க்கும் பதில் கூறினார்.திடீரென்று அவருக்குள்ளிருந்த தேவ ஆவியானவர் கிரியைசெய்ய தொடங்கினார். அந்த ஊழியர் அந்த முரடர்களின் ஒருவனைப்பார்த்து “ஐயா….உங்கள் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் கூறினேன். இனி நான் கேட்கப் போகும் ஒரேயொரு கேள்விக்கு மட்டும் நீங்கள் பதில் சொல்லுங்கள் என்றார்.

“பல வருடங்களுக்கு முன், நீங்கள் உங்கள் உடன் பணிசெய்கிற ஒருவரை தனிமையாக இரயில் ஏஞ்சின் செட்டில் அழைத்து சென்று அவர் கழுத்தை நெரித்து கொலை செய்தீர்கள் அப்படித்தானே? என்று கேட்டார். இதைக்கேட்ட அவர் நடுங்கிபொனார் காரணம் இந்த கொலைப்பற்றி யாருக்குமே தெரியாது!

மறுகணம் அவன் ஊழியரின் காலில் விழுந்தான்! “ஐயா…நான் பாவி கொலைகாரன் எனக்காக ஆண்டவரிடம் மன்றாடுங்கள் என்று கதறி அழுதான்!

அன்பானவர்களே! கடவுளுக்கு நேராக அவர்களின் பிள்ளைகளுக்கு நேராக எதிரிடுகிறவர்கள் இறைவனால் கண்டிப்பாக அடையாளம் காட்டப்படுவார்கள் என்பதே உண்மை!

**“உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர் நிற்க்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்கு கொடுப்பேன்” (லூக் 21:15).**

-நெல்சன் சோபித ராஜ்

# The Cave Church

The Monastery of Saint Simon, also known as the Cave Church, is located in the Mokattam mountain in south-eastern Cairo, Egypt, in an area that is known as 'garbage city' because of the large population of garbage collectors or Zabbaleen that live there. The Zabbaleen are descendants of farmers who started migrating from Upper Egypt to Cairo in the 1940s. Fleeing poor harvests and poverty they came to the city looking for work and set-up makeshift settlements around the city. Initially, they stuck to their tradition of raising pigs, goats, chickens and other animals, but eventually found collecting and sorting of waste produced by the city residents more profitable. The Zabbaleen would sort through household garbage, salvaging and selling things of value, while the organic waste provided an excellent source of food for their animals. In fact, this arrangement worked so well, that successive waves of migrants came from Upper Egypt to live and work in the newly founded garbage villages of Cairo.



For years, the makeshift settlements of the Zabbaleen were moved around the city trying to avoid the municipal authorities. Finally, a large group of Zabbaleen settled under the cliffs of the Mokattam or Moquattam quarries at the eastern edge of the city, which has now grown from a population of 8,000 in the early 1980s, into the largest garbage collector community in Cairo, with approximately 30,000 Zabbaleen inhabitants.



Egypt is a Muslim-majority country, but the Zabbaleen are Coptic Christians, at least, 90 percent of them are. Christian communities are rare to find in Egypt, so the Zabbaleen prefer to stay in Mokattam within their own religious community even though many of them could afford houses elsewhere.

The local Coptic Church in Mokattam Village was established in 1975. After the establishment of the church, the Zabbaleen felt more secure in their location and only then began to use more permanent building materials, such as stone and bricks, for their homes. Given their previous experience of eviction from Giza in 1970, the Zabbaleen had lived in temporary tin huts up till that point. In 1976,

a large fire broke out in Manshiyat Nasir, which led to the beginning of the construction of the first church below the Mokattam mountain on a site of 1,000 square meters. Several more churches have been built into the caves found in Mokattam, of which the Monastery of St. Simon the Tanner is the largest with a seating capacity of 20,000. In fact, the Cave Church of St. Simon in Mokattam is the largest church in the Middle East.

**If we do not bear the cross of the Master; we will have to bear the cross of the world. With all its earthly goods.**

**Which cross have you taken up...?**







## Facts About Acts


**Acts is the only book in the Bible to ask the question "What must I do to be saved?" and provides the answer**

# History of Cross

**By: Joshua.K**



The cross is thought to have originated from the ancient Babylonians before its spread to other parts of the world such as Syria, Egypt, Greek, Latin, India, and Mexico. The pre-Christian cross was used as a religious symbol and as an ornament among the Egyptians, Syrians, Greeks, Persians, Europeans, and in some parts of Africa. There was, therefore, universal use of the pre-Christian cross. In many cases, its use was usually connected to some form of worship.




The pre-Christian cross existed in two forms: the *tau* cross and the *swastika* or *fylfot* cross. The *tau* cross resembles the Greek capital letter T. On the other hand, the *fylfot* cross resembles four Greek capital letter G's placed together. The *tau* cross was initially used among the pagans. It was later adopted by the Christians in Egypt where its use became common. For this reason, the *tau* cross is sometimes referred to as the Egyptian cross.

Pope Innocent III said "The sign of the cross is made with three fingers, because the signing is done together with the invocation of the Trinity. ... This is how it is done: from above to below, and from the right to the left, because Christ descended from the heavens to the earth..."



# பாடல் பிறந்த கதை






## துதித்துப்பாடிட பாத்திரமே...

துதித்துப்பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதேது
திகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

**சாராள் நவரோஜி**

இந்தப் பிரபல பாடலை எழுதி, ராகமும் அமைத்து, பல இடங்களில் ஆண்டவரை உற்சாகமாயத் துதித்துப் பாடிவரும் சகோதரி.சாராள் நவரோஜியை, கிறிஸ்தவ சமுதாயமனைத்தும் நன்கு அறியும். கடந்த 40 ஆண்டுகளாக, இசைவழி இறைப்பணி செய்துவரும் இச்சகோதரியின் மூலம் கிறிஸ்தவ உலகிற்கு தேவன் அருளிய பாடல்களின் எண்ணிக்கை 361 ஆகும்.

சகோதரி சாராள் நவரோஜி 60 ஆண்டுகளுக்கு முன் ஊழிய வாஞ்சை நிறைந்த பெற்றோருக்குப் பிறந்தார். இவரது தந்தை திரு சாலமோன் ஆசீர்வாதம் ஒரு கர்நாடக இசை மேதையாவார். அவரது முன்னோர் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். மதுரை அழகர் கோவிலில் பாடல்களைப் பாடிவந்தவர்கள். திரு. சாலமோன், சாது சுந்தர்சிங்கின் மூலம் நற்செய்தியை அறிந்து, ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், கர்நாடக இசையில் ஆண்டவரைத் துதித்துப் பல பாடல்களை இயற்றிப் பாடினார். லுத்தரன் திருச்சபை நாட்டையர்களுக்குப்

பாடக் கற்றுக் கொடுத்தார். சகோதரியின் தாயார் திருமதி. சவுந்தரம் அம்மையார் 1924-ம் ஆண்டு முதல், வெளிநாட்டு மிஷனரிச்சகோதரிகளுடன் சேர்ந்து, தென்னகத்தில் சிறுவர் ஊழியத்தை ஆரம்பித்து நடத்திய முன்னோடிச் சிறுவர் மிஷனரியாவார்.

இத்தகைய பெற்றோருக்குப் பிறந்த சகோதரி சாராள், லுத்தரன் திருச்சபையைச் சேர்ந்தவர். பின்னர், தனது 14-வது வயதில், பிரதரன் அசெம்பிளி நடத்திய நற்செய்திக் கூட்டத்தில் இயேசுவைத் தன் சொந்த ரட்சகராக ஏற்றுக் கொண்டார். தனது 18-வது வயதிலே, பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றார். ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, 1956-ஆம் ஆண்டு முதல், பாடல்களை இயற்றி, ராகமமைத்துப் பாடி, இசைத் தொண்டாற்றி வருகிறார்.

சென்னை மின்சார வாரியத்தில் எழுத்தராகப் பணிபுரிந்த நாட்களில், சகோதரி சாராள், ஆண்டவரின் அழைப்பைப் பெற்றார். எனவே, 1959-ம் ஆண்டு, தனது இருபதாவது வயதில், முழுநேரப் பணிக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். 1959 முதல் 1962 வரை இலங்கையில் வேதாகமத்தில் பயிற்சி பெற்று, ஊழியம் செய்தார். பின்னர் தமிழகம் திரும்பி, திருச்சபைகளைச் சந்தித்து, உயிர்மீட்சிக் கூட்டங்களை நடத்தி, ஆவியில் அனல் மூட்டினார்.

சென்னையில், சீயோன் சுவிசேஷ ஜெப ஐக்கிய சபையை ஸ்தாபித்து, தேவ பணியை அருகிலும், தூரத்திலும் உள்ள கிராமங்களில் தொடர்ந்து உத்தமமாய்ச் செய்து வருகிறார்.


---





கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை நீங்கள் சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள் அதை எழுதி அனுப்புங்கள்/தெரியப்படுத்துங்கள். கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.

# சிறுவர் பகுதி / Children's Corner




KIDS CORNER



# Kids Coloring (Kinder & Beginner)



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

Dear Kids... Write your name... here...

## Spot the Differences for Jesus Raised Lasarus From the Dead

Compare the picture on the top with the picture on bottom. Circle the 11 things that are different.





**Your Name Here:**

# THE FRUIT OF THE SPIRIT

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | G | W | T | K | G | Q | T | C | A | D | P | F |
| I | M | F | F | W | K | Y | O | L | X | D | A | I |
| K | C | F | F | Q | L | F | I | Y | O | I | T | V |
| I | I | K | A | O | S | G | L | O | T | V | I | W |
| X | M | Q | I | O | R | Y | E | H | V | S | E | D |
| L | O | R | T | N | O | C | F | L | E | S | N | A |
| W | B | R | S | J | D | U | R | A | I | E | C | H |
| U | J | I | O | B | L | N | T | Z | C | N | E | G |
| J | Y | Z | L | N | J | Q | E | A | R | D | L | L |
| X | B | F | E | M | U | U | E | S | D | O | Y | B |
| Q | Q | S | D | X | U | P | O | Q | S | O | B | T |
| A | S | S | E | N | E | L | T | N | E | G | M | O |
| X | L | G | J | O | M | L | Q | U | P | U | L | N |

BiblePuzzles.com Galatians 5:22-23




FAITHFULNESS
GENTLENESS
GOODNESS
JOY
KINDNESS
LOVE
PATIENCE
PEACE
SELF-CONTROL

*Your Name Please...*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# Bible Cross Word (Primary & Above)




1.Father of Joseph ________↓

2. Mother of Joseph ______↑

3. How many brothers did Joseph have?↓

4. To which country was Joseph taken as a slave?→

5. To whom was Joseph sold to by his brothers?↓

6. Wife of Joseph_______→

7. Name of the brother who was kind to Joseph →

8. The second part of pharoh's dream interpreted by Joseph was about?→

9.What gift did Joseph receive from his father when he was young?→

10. Name of the place where Joseph's brothers were grazing the flock? →

11. Under whom was Joseph working after taken as a slave?↓

- In prison Joseph interpreted the dreams of the chief 12.__________ →and the chief 13 _________↓

**(Primary & Above)**

**FROM THE BOOK OF NAHUM CHAPTER 1-3**
**(Referred from NIV BIBLE)**

**COMPLETE THE VERSE AND QUOTE THE REFERENCE**

1) "The Lord is __________, a __________ in times of trouble. He cares for those who __________ in him."

2) "The Lord is ___________ and ___________ God, the Lord takes __________ and is filled with wrath".

3) "Now I will break their __________ from your _________ and tear your __________ away".

4) "Nineveh is like a ____________ whose waters are draining away. Stop! Stop! They ___________ but no one turns back".

5) "Who can withstand his _____________? Who can endure his _________ ______?"

6) "I am ____________ you, declares the ________ _________"

7) "Woe to the city of _________, full of __________, full of _________- never without victims"

8) "The Lord has given a command concerning you __________: you will have no descendants to bear your name"

9) "Whatever they __________ against the __________ he will bring to an end: __________ will not come a second time".

10) "He rebukes the _________ and ___________ it up; he makes all the __________ run dry".

Your Name Here...

## Kids who did the Coloring

Crasslin Devona / Hartlyn Herchil / Reagan Shan
Jania Preni / Johan Sanjo / Rishon Yojit / Ridhun Yojit
Chris / Jeremiah / Jemima




## Kids who did the Spot Difference

Johan Sanjo / Reagan Shan / Ridhun Yojit
Jeremiah / Jemima

## Kids who did the Jumbled Letters

Roshan / Eric Aaron / Shelbino
Jason Eric / Jonathan / Jeremiah

## Children who successfully did Bible Cross Word

Roshan / Eric Aaron / Shelbino
Jason Eric / Joshua / Angelin / Annlin
Jonathan / Jeremiah

## Children who successfully did the Bible Quiz

Roshan / Shelbino / Jason
Annlin / Angelin / Joshua / Jonathan



# வேத வினா-விடை போட்டி
## (யோவேல் & ஆமோஸ்)

1. ஆமோசை யூதா தேசத்துக்கு ஓடி போக சொன்னது யார்?
2. யாரிடம் கர்த்தர் இரகசியத்தை வெளிப்படுத்துவார்?
3. கர்த்தருடைய நாள் எப்படி இருக்கும்?
4. கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளாமல் போனது யார்?
5. கர்த்தருடைய வசனத்தை எங்கே தேடவும், எங்கே அலைந்து திரிந்தும் கண்டடையாமற் போவார்கள் ?
6. கர்த்தருடைய பரிசுத்த பர்வதம் எது?
7. தேவனுடைய ஆலயத்தில் நிறுத்தப்பட்டது எது?
8. யாரை கர்த்தர் கருக்காயினாலும் விஷப்பணியினாலும் தண்டித்தார் ?
9. ஆமோஸ் யாரை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார் ?
10. கர்த்தர் மாதிலின் மேல் நிற்கையில் அவர் கையில் இருந்தது என்ன? அக்கிரமம் செய்கிறவர்களின் பட்டணம் எது?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

1. ஒசியா (9:12) | 2. ஒசியா (8:11)
3. தானி (6:6) | 4. ஒசியா (14:9) | 5. ஒசியா (11:3,4)
6. ஒசியா(12:5) | 7. ஒசியா (7:8) | 8. ஒசியா (13:16)
9. ஒசியா (14:6) | 10. ஒசியா (6:8)




**Feb'2020**
**மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திரு . ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜமுனா ராணி

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ஷெரின் தினேஷன்

செல்வி. ஜெரின் மகதலேன்

திருமதி. எபென் A. பிரசாத்

## பிறந்தநாள் ஆசரிப்போர் **Birthday Celebrants**

| | |
|---|---|
| 1-Mar | Mr. David Livingston |
| 2-Mar | Mrs. Vasantha Selva Kumari W/o Mr. David raj |
| 2-Mar | Mrs. Shaly Jesie W/o Mr. Melbin Paul |
| 3-Mar | Mrs. M.Subha Alvin W/o Mr. Alvin Kumar |
| 3-Mar | Mrs. Yesubai W/o Mr. David Sorna Balan |
| 4-Mar | Mr. Libin Raj S/o Mr. Pushparaj |
| 6-Mar | Mr. Derick Gasbath Joy |
| 6-Mar | Mr. Hebin Jose George |
| 14-Mar | Mrs. Radhika Grace W/o Mr. Selva Kumar |
| 15-Mar | Mrs. Eben A.Prasad W/o Mr. Ashok Prasad |
| 16-Mar | Mrs. Bhuvaneshwari C/o Mr. Daniel Durai Singh |
| 17-Mar | Mr. D.P.Joseph Jovin S/o Mr. Deva Prakash |
| 17-Mar | Mrs. R.Jackulin Milka W/o Mr. Havin Heba |
| 19-Mar | Mr. A.S.Kannan |
| 23-Mar | Ms. Gabrilin U.S.Shasmitha D/o Mr. Ujin Raj |
| 23-Mar | Mrs. Aji Kumari W/o Mr. Robert Wilson |
| 24-Mar | Mr. Lifin Raj.P S/o Mr. Pushparaj |
| 25-Mar | Mrs. Rebecca W/o Mr. Prabhu Dinesh Kumar |
| 27-Mar | Mstr. Johan Sanjo S/o Mr. Belfer John |
| 28-Mar | Ms. Eastrine Benedicta Raj S/o Mr. Saman Rajkumar |
| 28-Mar | Mstr. Ridhun Yojit S/o Mr. Sathish Kumar |
| 29-Mar | Mr. Antony Helvin Gerald |
| 30-Mar | Mr. Ajin Shah S/o Mr. Selvsiter Solomon |
| 30-Mar | Mr. D.L.Derin S/o Mr. David Livingston |
| 31-Mar | Ms. Annlin Sophia D/o Mr. Nelson Sopitha Raj |

## திருமணநாள் ஆசரிப்போர் /**Wedding Anniversary**

| | |
|---|---|
| 7th Mar | Mr. Ujin Raj & Mrs. Sangeetha |

**என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.**

**நீதிமொழிகள் 9:11**






# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 094 | Mobile no: 056 636 1774 |
|---|---|
| Mr. Joel Ranjith Kumar (Head) |  |
| Mrs. Safeena (Wife) | |
| Mstr. Jeffrey Immanuel (Son)<br>Mr. Kevin (Son) | |
| Location in India:<br>Madurai, Tamilnadu | |

| CSI Tamil Parish Family No: 095 | Mobile no: 055 675 7928 |
|---|---|
| Mr. Alvin Kumar (Head) |  |
| Mrs. Subha Alvin (Wife) | |
| Ms. Alen Maisie (Daughter)<br>Mstr. Alan Manis (Son) | |
| Location in India:<br>South Street, Veerani, Aloor,<br>KK Dist, Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 096 | Mobile no: 050 789 6299 |
|---|---|
| Mr. Danesh Yogendra Rao (Head) |  |
| Mrs. Annie Selvi Danesh (Wife) | |
| Ms. Sharon S Rao (Daughter)<br>Mr. Godson Daniel Rao (Son) | |
| Location in India:<br>Sharon Empire, Padmavathy nagar,<br>Madambakkam, Chennai, TN | |

| CSI Tamil Parish Family No: 098 | Mobile no: 052 645 8361 |
|---|---|
| Mr. Rajesh Chelladurai (Head) |  |
| Mrs. Shalini (Wife) | |
| Baby. Crasslin Devona (Daughter) | |
| Location in India:<br>Near SDA School, Pulierranghy,<br>Thiruvattar PO, Tamilnadu | |

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம்,<br>கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர்<br>குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |
| **இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**<br>ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம். | | |

This reading plan will guide you through all 66 books of the Bible in the coming year.

## DAILY BIBLE READING 2020

**"Your word is a lamp to my feet and light for my path"**

### MARCH

| | | |
|---|---|---|
| 1 Deuteronomy 26 – 27 | 11 Joshua 21 – 22 | 21 Ruth 1 – 4 |
| 2 Deuteronomy 28 – 29 | 12 Joshua 23 – 24 | 22 1 Samuel 1 – 3 |
| 3 Deuteronomy 30 – 32 | 13 Judges 1 – 3 | 23 1 Samuel 4 – 7 |
| 4 Deuteronomy 33 – 34 | 14 Judges 4 – 5 | 24 1 Samuel 8 – 12 |
| 5 Joshua 1 – 4 | 15 Judges 6 – 8 | 25 1 Samuel 13 – 14 |
| 6 Joshua 5 – 7 | 16 Judges 9 – 10 | 26 1 Samuel 15 – 16 |
| 7 Joshua 8 – 10 | 17 Judges 11 – 13 | 27 1 Samuel 17 – 18 |
| 8 Joshua 11 – 13 | 18 Judges 14 – 16 | 28 1 Samuel 19 – 21 |
| 9 Joshua 14 – 17 | 19 Judges 17 – 19 | 29 1 Samuel 22 – 24 |
| 10 Joshua 18 – 20 | 20 Judges 20 – 21 | 30 1 Samuel 25 – 27 |
| | | 31 1 Samuel 28 – 31 |



**THANKYOU LORD ALMIGHTY &**
**THANKYOU ALL FOR MAKING THIS EVENT MORE SUCCESSFUL.**

## *Church Picnic - 2020*





Strictly For Private Circulation

Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparishalain.org